93 சுட்டி
80 காசு
மாத இதழ் நவ.'88





FREE E - BOOKS , www.thamizham.net.,

# படப் பதில்கள்

இந்தியா ஒலிம்பிக்கில் தோற்றதற்கு விளையாட்டு அமைச்சர் மார்க்கரெட் ஆல்வா என்ன செய்யப் போகிறார்?



அமெரிக்க அதிபர் ரீகனின் பார்வையில் உலகம் எப்படி இருக்கிறது?




FREE E - BOOKS , www.thamizham.net.,

# ப்ரூட்டி உண்மையான பழச்சாறா??

புதிதானது, சாறு நிறைந்தது அப்படியானால் அது ப்ரூட்டிதான்,' என்று இந்தியாவின் எட்டுத்திசைகளில், எல்லா செய்தித் தொடர்பு சாதனங்களிலும் விளம்பர முழக்கம் செய்கிறது ப்ரூட்டி குளிர்ப்பானம் தயாரிக்கும் பார்லே நிறுவனம்.




இந்த விளம்பரத்தை அப்படியே நம்பி தூய மாம்பழச்சாறைக் குடிப்பதாக எண்ணி, ரூ 3/- கொடுத்து வாங்கிக்குடித்துக் குதுகலிக்கிறோம்.

ஊரறிந்த பிரபல கம்பெனியின் விளம்பரம் பொய்யாக இருக்கும் என்று எள்ளளவும் பலரும் சந்தேகிப்பதில்லை. ஆனால் பார்லேயின் ப்ரூட்டி மோசடித்தனமானது என்று வழக்குத் தொடர்ந்திருக்கிறது கல்கத்தா நுகர்வோர் இயக்கம். அவர்களின் குற்றச்சாட்டு:

**நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்திற்கு உட்பட்டு ப்ரூட்டி தயாரிக்கப்படவில்லை. பழச்சாறு என்று அழைக்கப் படுதற்குரிய அளவிற்கு இதில் தேவையான அளவு பழம் சேர்க்கப்படவில்லை.**

**இதே நிறுவனம் தயாரித்து வழங்கும் ஆப்பி' என்ற பானமும் இதே குற்றச்சாட்டிற்கு உட்படுத்தப் பட்டிருக்கிறது. செயற்கையாக வண்ணமும், வாசனையும் தித்திப்பும் சேர்க்கப்பட்ட நீரில், சிறிதளவு பழத் துண்டுகளோ அல்லது 'கான்சென்டிரேட்டோ' சேர்க்கப்பட்டிருக்கிறது. நீர் சேர்க்கப்பட்ட பழச்சாறு அது அடைக்கப்பட்ட அட்டைப் பெட்டிக்குள் அதன் முடிவு தேதி (expiry date) வரை கூட புத்தம் புதிதாக இருக்க முடியாது. எனவே பார்லே நிறுவனம் புத்தம் பதிய பழச்சாறு என்று விளம்பரப்படுத்துவது மக்களை ஏமாற்றுவதாகும்.**

கிராமத்தில் உள்ள சின்ன கம்பெனிகள் தாம் கோல்ட் ஸ்பாட் பாட்டில்களில் ஆரஞ்சு கலர் தண்ணீரை அடைத்து மோசடி செய்வார்கள், பெரிய நிறுவனங்களெல்லாம் உத்தமர்கள் என்று இனியும் நம்பிக்கொண்டிருக்க முடியாது.

**ஸ்டெனிஸ்லாஸ்**

# சுட்டி வாசகர் இயக்கம்.

சுட்டியின் கொள்கையிலும் வளர்ச்சியிலும் தீவிர பங்கு கொள்ள விழைகின்ற ஆர்வலர்கள் இவ்வியக்கத்தில் சேர விவரங்களுக்கு எழுதலாம்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சதுரங்கக் காய்கள் நகரத் தொடங்கி விட்டன!

கூட்டணியைப் பொறுத்தே தமிழகத் தேர்தல் முடிவுகள் என்பது இன்றைய நிலைமை.

ஜானகி அணியைக் காங்கிரசோடு இணைக்க நால்வர் அணி தீவிரமாகச் செயல்படுகிறது. திருநாவுக்கரசும், பண்ருட்டியும் கருமமே கண்ணாகியுள்ளனர். காங்கிரஸ், அ.தி.மு.க (ஜா), முஸ்லீம் லீக், தா.பாண்டியனின் கம்யூனிஸ்ட் கட்சி, நால்வர் அணி - ஐந்தையும் ஒன்றாக இணைக்க முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்த இணைப்பின் மூலம், தி.மு.க விற்கு எதிரான அணி உருவாகும் என்பதோடு, ஜெயலலிதா தனிமைப் படுத்தப்படுவார் என்பதும் நால்வர் அணியினரின் திட்டம். காங்கிரஸும், அ.தி.மு.க. (ஜா)வுடன் கூட்டணி வைத்துக் கொள்ள விரும்புவது போல ஒரு தோற்றம் கொடுக்கிறது. அது வெறும் தோற்றம்தான். உண் மையில் ஜெ அணியுடன் கூட்டு வைத்துக் கொள்ளவே காங்கிரஸ் விரும்புகிறது. ஜா அணியுடன் சேரப் போவது போல நடித்து, ஜெயலலிதாவைத் தன் பக்கம் இழுப்பதற்கும், சீட்டு பேரத்தில் ஜெ அணியை வெல்வதற்குமே காங்கிரஸ் இந்தத் தந்திரத்தைக் கையாள்வதாய் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். அப்துல் சமதும், தா.பா.வும் காங்கிரஸ் போகும் பக்கம் போகிறவர்கள். நால்வர் அணி மட்டும் கடைசியாய்த் தத்தளிக்கும.

கடைசிவரை ஜெ அணி ஒத்து வராவிட்டால் மட்டுமே ஜாவுடன் காங்கிரஸ் உறவு கொள்ளும். காங்கிரஸ் கூட்டை ஆர்.எம்.வீ., காளிமுத்து, ஆலடி அருணா, வலம்புரிஜான் ஆகியோர் கடுமையாய் எதிர்ப்பார்கள் என்றாலும் கூட ஜானகி அம்மாள் காங்கிரஸ் பக்கம்தான் சாய்வார் என்று கூறுகிறார்கள். பாவம் சிவாஜி!

தி.மு.க. - முஸ்லீம் லீக் உறவு உடைந்ததில் காங்கிரஸுக்கு பெரிய வெற்றிதான். ஆனாலும் முஸ்லீம் லீகை கருணாநிதி உடைத்துவிட்டார். அப்துல் சமதைக் கண்டித்துச் சுவரொட்டி ஒட்டியிருக்கும் இஸ்லாமிய இளைஞர்கள் கோபாலபுரத்து 'இஸ்லாமிய இளை ஞர்கள்'. முஸ்லீம் லீக் (சமது), முஸ்லீம் லீக் (லத்தீப்) என்று அடுத்த சுவரொட்டியை எதிர்பார்க்கலாம்.

தேர்தல் வெற்றிக்காக நம் அரசியல் தலைவர்கள் எதையும் செய்வார்கள். புதியவள் கழுத்தில் கட்டுவதற்காக, எந்தப் பழைய தாலியையும் எளிதில் அறுப்பார்கள்.

- பொதுஜனன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

பன்முக மனிதர்கள்

# மணியன்

`ஞானபூமி' மாதிரியான பத்திரிகைகளின் மூலம் பக்தியை மக்களிடையே வளர்க்கிறார் மணியன் என்று பரவசப் படுகிறார்கள் சிலர்; பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு எதிரான நச்சு விதைகளைத் தூவுகிறார் மணியன் என்று கோபப்படுகிறார்கள் சிலர். பாவம் ... இரண்டு சாராருமே நம் மணியனிடம் ஏமாந்து போகிறவர்கள். பக்தியை வளர்ப்பது, பகுத் தறிவைச் சாய்ப்பது - இப்படியெல்லாம் எந்த நிரந்தரமான கொள்கையும் அவருக்கு இல்லை. செக்ஸ் மாதிரி, சினிமா, அரசியல் மாதிரி, மற்ற மற்ற விஷயங்கள் மாதிரி, பக்தியும் அவருக்கு ஒரு வியாபார விஷயம், அவ்வளவுதான், `ஞானபூமி'யைத் தொடர்ந்து படிப்பவர்கள் இதைப் புரிந்து கொள்ளலாம். `ஞானபூமி'யின் அட்டைப்படங்கள் உட்பட, பல பக்கங்களில் பெண்களின் படங்கள், கவனமாக-செக்ஸ் உணர்வைத் தூண்டுவனவாக அமைந்திருக்கும். கேட்டால், நம் பார்வையில் கோளாறு என்று கூறிவிடுவார்.



அவருடைய அரசியல் விஷயமும் அப்படித்தான். அவரைக் காங்கிரஸ்காரர் என்றும், எம்.ஜி.ஆர் கட்சியைச் சார்ந்தவர் என்றும் நினைப்பதெல்லாம் முற்றிலும் தவறானது. லாபம் கிடைக்குமென்றால், திராவிடர் கழகத்திலும் உறுப்பினராக அவர் தயங்க மாட்டார்.

தற்போது மிக வேகமாகக் கருணாநிதியை நெருங்கிக் கொண்டிருப்பதாக கேள்வி, எம்.ஜி.ஆர் உயிரோடு இருந்தபோது 'சர்வேதச அளவில்' அவருக்குச் செய்த உதவிகளை இப்போது கருணாநிதிக்குச் செய்யக் கட்டாயம் முன்வருவார்.

எந்த ஆழமும் இல்லாமல், வெளிநாட்டு மக்களின் கலாச்சாரத்தை, பாரம்பரியத்தை எல்லாம் விளக்காமல், மேலோட்டமாய், ஜனரஞ்சகமாய்ப் பயணக் கட்டுரை எழுதுவதில் வல்லவரான இவர், தன் வெளிநாட்டுப் பயணத்தைப் பயன்படுத்தி உள்நாட்டில் பெற்ற வசதிகளும் குறைவானவை அல்ல.

*சந்தர்ப்பவாதிகளின் இதயங்கள் எப்போதும் பேசுவதே இல்லை போலிருக்கிறது.*

-கோபக்காரன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

காமிரா கண்களில் சமூகத்தைத் தேடும்

# புகைப்படப்போட்டி

முதல் பரிசு: ரூ 100

இரண்டாம் பரிசு: ரூ 25




தேர்ந்து வெளியிடப்படும் அனைத்துப் புகைப்படங்களுக்கும் இரண்டாம் பரிசு உண்டு.

**விதிகள்:** • புகைப்படங்கள் சமூகப் பார்வையுடையதாக அமைய வேண்டும். • கருப்பு வெள்ளைப்படமாக, குறைந்தது அஞ்சலட்டை அளவு இருக்க வேண்டும். • இப்போட்டி சுட்டி வாசகர்களுக்கு மட்டுமே. எனவே பக்கத்தில் உள்ள சுட்டி வாசகர் வில்லையை வெட்டியிணைத்து அனுப்புதல் அவசியம். • ஒருவர் எத்தனை புகைப்படங்களும் அனுப்பலாம். ஒவ்வொரு புகைப்படத்துடனும் வெட்டி ணைப்பு அவசியம். • கிடைக்க வேண்டிய இறுதி நாள்: 31-12-88. • பிப்ரவரி 89 இதழில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும். • உறைமேல் 'சுட்டி புகைப்படப் போட்டி' எனக் குறிப்பிடுங்கள்.

**இரு மாதங்களுக்கு ஒரு முறை புதுப்புது சுட்டி வாசகர் போட்டிகளை எதிர்பாருங்கள்! அடுத்த போட்டி அறிவிப்பு: 1-1-89 இதழில்**

## சுட்டி சந்தா

12 இதழ்களை அஞ்சலில் பெற ரூ. 10 பணவிடை (M.O.) செய்யுங்கள். ஒவ்வொரு இதழையும் தவறாமல் பெற சந்தாதாரராவதே சரியான வழி. முகவரி: சுட்டி: AP-638, H பிளாக், அண்ணாநகர், சென்னை - 600 040.

## சுட்டி இணைப்பு

நீங்கள் பெற்ற பயனை உங்கள் நண்பர்களும் பெறட்டுமே! சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக்கூடிய புதியவர்கள் முகவரிகள் எவ்வளவு வேண்டுமாயினும் அனுப்புங்கள். உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# நடனக் காட்சிகள்

அன்றைய தமிழ்த் திரைப்படங்களில், லலிதா, பத்மினி, ராகினி அல்லது குசலகுமாரி - இப்படி யாரேனும் ஒருவரின் நடனக்காட்சி கண்டிப்பாய் இருக்கும். அதே மாதிரி, இன்றைய திரைப்படங்களில் சில்க் சுமிதா, அனுராதா, டிஸ்கோ சாந்தி அல்லது குயிலி - இப்படி யாரேனும் ஒருவரின் 'கிளப் டான்ஸ்' கண்டிப்பாய் இடம்பெறுகிறது.

நடனக் கலையை அடிப்படையாகக் கொண்டு தற்போது வெளிவரும் தமிழ் படங்கள் மிகக் குறைவுதான்-சலங்கை ஒலி, தங்கக் கலசம் முதலான ஓரிரு படங்களே வெளியாகியுள்ளன. அவையும்பெரியவெற்றியைஅடையவில்லை.

தரமான நடனத்தின் சிறப்பு, அபிநயம், பாவனை முதலியவைகளைப் பொறுத்தே அமையும். ஆனால், இன்றைய படங்களில் இடம்பெறும் நடனங்கள் இருவகையாக மட்டுமே அமைந்துள்ளன. சைகை விளக்க அசைவுகளாகவும் (Demonstrative movements), காமக்குறிப்பு (Suggestive vulgarity) அசைவுகளாகவும் மட்டுமே நம் நடனங்கள் மிஞ்சியுள்ளன.

இவ்விரு வகை நடனங்களையுமே(?) வளர்த்து விட்டவர்களில் எம்.ஜி.ஆருக்கும் இடமுண்டு. எதற்கெடுத்தாலும், வானத்தை நோக்கி, இரண்டு கைகளையும் மேலே நீட்டுவது அவருடைய நடனபாணி.

இத்தகைய சைகை விளக்க அசைவுகள் ஒரு கட்டத்தில் மிக அதிகமாயிருந்தன. 'இது சத்தியம்' என்னும் படத்தில், 'சத்தியம்.. இது சத்தியம்' என்று தொடங்கும் பாடலில் நடிகர் அசோகனின் நடன அசைவுகள் முழுக்க முழுக்க இவ்வகையைச் சார்ந்தவை. 'தலைக்கு மேலே வெள்ளம் போனால், ஜாணென்ன, முழமென்ன' என்று பாடல் வரி வரும் போது, ஜாண் மாதிரியும், முழம் மாதிரியும் அசோகன் சைகை காட்டுவார். கலையழகே அற்றுப்போன, ரொம்பவும் அமெச்சூர்த் தனமான முறை இது.

தற்போது இம்முறை குறைந்து வந்தாலும், இரண்டாம் வகை மிகுதியாகிக் கொண்டுள்ளது. ஆணும், பெண்ணும் ஏறத்தாழ, புணர்ச்சியின்பம் பெறும்போது ஏற்படுவதைப் போலவே, சில பாடல் காட்சிகளின் அங்க அசைவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு கொடுமை என்னவென்றால், மிக மோசமாய்க் காம உணர்வைத் தூண்டும் இத்தகைய அங்க அசைவுகளை அதிகமாய் அமைப்பது புலியூர் சரோஜா என்னும் ஒரு பெண் நடன இயக்குநர்தான். ஆகபெண்மையைப்பெண்களேமலினப்படுத்தியும், கொச்சைப் படுத்தியும் காட்டும் அநாகரிக கற்காலம் திரைப்பட நடன உலகில்தொடங்கியுள்ளது.

(அடுத்து: சண்டைக் காட்சிகள்)

-வசந்தா



FREE E - BOOKS , www.thamizham.net.,

# முறியடிக்க முடியா

"...நான் உன்னோடு கொண்டுள்ள நட்பு உண்மை என்றால், இதுதான் நான் உனக்கு எழுதும் கடைசிக் கடிதம் என்று என் இதயம் சொல்கிறது.

அப்படி நடந்துவிட்டால் உன்னை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இந்த போர் முடிந்ததும் என்றாவது ஒரு நாள் ஜெர்மனிக்கு போ. என் மகன் கார்லைப் பார்த்து அவனது தந்தையைப் பற்றிச் சொல்.

போரால் நாம் பிரிக்கப்படாமல் இருந்த போது காலம் எப்படி இருந்தது என்று அவனுக்குச் சொல். பூமியில் உள்ள மனிதர்களுக்கு இடையிலானவை எப்படி இருக்க வேண்டும் என்று நான் கூறியதாக அவனுக்குச் சொல்.

## ஒலிம்பிக் சாதனை

இரண்டாம் உலகப் போரின் போது போர் முனையில் இருந்த லூஸ்லோங் ஜெஸி ஓவன்ஸுக்கு எழுதிய கடிதம் இது. இக் கடிதம் எழுதிய சில நாட்களில் போர்க்களத்தில் இறந்துவிட்டார்.

இரண்டு பேருமே விளையாட்டு வீரர்கள். 1936ல் பெர்லின் ஒலிம்பிக் போட்டியில்தான் இருவரும் நண்பர்கள் ஆனார்கள். அது முதல் இடைவிடாமல் கடிதம் எழுதிக் கொண்டார்கள்.

லூஸ் லோங் நீளத் தாண்டும் போட்டியில் ஜெர்மனிக்கு தங்கப் பதக்கம் வாங்கித் தருவார் என்று சர்வாதிகாரி இட்லர் எதிர்பார்த்த - கட்டளை இட்ட ஜெர்மானிய விளையாட்டு வீரர்.

ஜெஸி ஓவன்ஸ் அமெரிக்க நீக்ரோ விளையாட்டு வீரர். மூன்று உலக சாதனைகளை முறியடித்தவர்.

பெர்லின் ஒலிம்பிக் அரங்கில் இட்லரின் முன்னிலையில் ஒரு லட்சம் பேர் திரண்டிருந்தனர். நீளத் தாண்டும் போட்டி தகுதித் தேர்வில் லோங்கும் ஜெஸ்ஸியும்.

ஜெஸ்ஸி இரண்டு முறை தாண்டியும் இரண்டு முயற்சியும் தவறாகவே முடிந்தது.

லோங்கின் **வெற்றி** நிச்சயம் என்று தெரிந்து இட்லரின் முகத்தில் மந்தகாசம். ஜெர்மானியர்களின் ஆரவாரம்.

சோர்ந்து நின்ற ஜெஸ்ஸியின் தோளில் ஒரு கரம் ஆதரவாகப் படர்ந்தது. 'தாண்டுவதற்கு ஓடும் முன் ஓரடி பின் சென்று ஓடித் தாண்டுங்கள்' என்று யோசனை கூறினார் லோங்.

அந்த யோசனையைப் பின்பற்றி தேர்வு பெற்று மறுநாள் தங்கப் பதக்கமும் பெற்றார் ஜெஸ்ஸி.

லோங்கிற்கு இரண்டாவது இடம்தான்.

இட்லரின் முகத்தில் எள் வெடித்தது. ஜெர்மானியர்களின் நெஞ்சம் கோபம் கனைவறது. ஆனால் லோங்கும் ஜெஸ்ஸியும் அன்றிலிருந்து இதயங்களால் சேர்ந்து வாழ்ந்தார்கள்.

ஒலிம்பிக் போட்டியில் எத்தனையோ சாதனைகள் படைக்கப்படலாம். பதக்கங்களைக் குவித்து பலத்தைக் காட்ட எல்லோரும் முயலலாம்.

ஆனால் சர்வாதிகாரி இட்லரின் மூக்கு நுனியில் நின்ற கோபத்தையும் அலட்சியம் செய்து அஞ்சாமையுடன் தன் வெற்றியையும் பலி கொடுத்து அடுத்த வீரனுக்கு யோசனை கூறிய லோங்கின் மனிதநேய உலக சாதனையை,

இனி யாரால், எப்படி முறியடிக்க முடியும்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# தகழி சிவசங்கர பிள்ளை என்ன செய்கிறார்?

'செம்மீன்' புகழ் தகழி சிவசங்கர பிள்ளையின் நாவல்களும், சிறுகதைகளும் கேரள மண்ணில் ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவாகவும், போராடுவோருக்குத் தோள் கொடுப்பன வாகவும் அமைந்தவை.

தனது இளமையில் தகழியே சில தொழிற் சங்கங்களுக்குத் தலைமை தாங்கியுள்ளார். மக்களை ஒன்று திரட்டியுள்ளார்.



தகழியின் தொழில் விவசாயம். கேரளத்தின் நெற்களஞ் சியமான குட்ட நாடு பகுதியில் உழவுத் தொழிலை நீண்ட காலமாக மேற்கொண்டு வருகிறார். இயற்கைக்கு எதிராகப் போராடும் உழவர்களின் வாழ்க்கையே தன்னை எழுதத் தூண்டியதாகக் குறிப்பிடுகிறார்.

ஆனால் இன்று தகழியின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. விரைவாக நிகழ்ந்து வரும் நிலவுரிமை மாற்றங்கள், சிறப்பாக குட்ட நாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், சராசரி நிலச் சொந்தக்காரர், நிலக்கூலி இவர்களின் உறவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. நிலத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் பல பகுத்தறிவற்றவை என்கிறார் தகழி. நசிந்து போன பழைய நிலச்சொந்தக்கார குடும்பங்களின் ஆண்களும் பெண்களும் தாமே உழவுத் தொழில் செய்யப் போகையில், நிலத்தொழிலாளர் ஏளனமாக நோக்குவதை இவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரது தொழிலாளர் வர்க்கத்தின் மேலான விமர்சனமும் எந்த அரசியல் கட்சியோடும் தனக்குத் தொடர்பில்லை என்று செய்த பிரகடனமும், கம்யூனிஸ்டு தலைவர்களை அதிர்ச்சி கொள்ளச் செய்துள்ளன. தகழி கூறுவது இதுதான்:

**விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் இயக்க பலத்தால் நிறைய பலனடைந்துள்ளனர். ஆனால் மேலும் நிறைய இவர்கள் (வேறு துறையில்) அடைய வேண்டியதும் உள்ளது. உழைக்கும் வர்க்கத்திற்கு ஒரு புதிய கலாச்சாரம் தேவை. ஆனால் தலைவர்கள் இதனை வளர்க்க முயல்வதே இல்லை. தொழிலாளி தன் கடமையை ஒழுங்காகச் செய்ய வேண்டுமென நிலைவுறுத்த எந்தத் தலைவருக்காவது தைரியம் உண்டா?'**

- (ஆதாரம்: வீக்) - இக.-



FREE E - BOOKS , www.thamizham.net.,




❀ இந்தியா முழுவதிலுமிருந்து சென்னை பர்மா பஜாருக்கு அந்நியப் பொருட்கள் வாங்க தினமும் வருவோர் தொகை 3000, ஞாயிறு 6000. ஒரு நாளைக்கு இங்கு சுமார் ரூ 1 கோடி வியாபாரம் ஆகிறது. கடைகளுக்கு வெளியே தரகர்கள் வழியாக மேலும் ரூ 1 கோடி வியாபாரம் தினமும் நடக்கிறது.

❀ பர்மாவிலிருந்து 1964-65 இல் 8 கிராம் தங்கத்துடனும். வெறும் 50 ரூபாயுடனும் மட்டுமே கிளம்ப அனுமதிக்கப்பட்ட 2 லட்சம் அகதிகள் சிலர் வாழ வழி வகுக்க காமராசரால் உருவாக்கப்பட்டது பர்மா பஜார். 3X7' மட்டுமே அளவுள்ள சுமார் 750 சிறுகடைகளை நம்பி இன்று 10,000 பேர் வாழ்கிறார்கள். ஒவ்வொரு கடைக்கும் 4,5 பங்குதாரர்கள் கூட உண்டு. பல பங்குதாரர்கள் இருக்கும் கடைகளில் கூட தலைக்கு ரூ 60 தினம் லாபம் பெற வழியுண்டு.

❀ பர்மா பஜாரில் இன்று கடை வைத்திருப்போர் பலரும் பர்மா அகதிகள் இல்லை. ராமநாதபுரம், நெல்லை, தஞ்சை மாவட்டங்களிலிருந்து, வந்தவர்களும், சென்னை நகர சிறு வியாபாரிகளும் கூட இங்குக் கடை வைத்துள்ளனர். இந்தக் கையகலக் கடைகளுக்கு இன்றைய 'பகடி' மதிப்பு மட்டும் ரூ 1 லட்சம்.

❀ 90% வெளிநாட்டுப் பொருட்கள் கடத்தப்பட்டவை அல்ல. இந்தியாவின் பல இடங்களில் தினமும் வந்திறங்கும் விமான, கப்பல் பயணிகளின் எண்ணிக்கை 5000. இவர்களே பர்மா பஜாருக்கு முக்கிய "சப்ளையர்கள்" மேலும் வேலையற்ற ஆட்களை சிங்கப்பூருக்கு அனுப்பிப் பொருள் எடுத்துவரும் முறையும்("ஹவாலர்") பரவலாக உள்ளது.

❀ வெளிநாட்டுப் பொருட்களுடன் உள்ளூர் போலி சரக்குகளையும் ஏராளமாகக் கலந்து விற்கின்றனர். டிரான்சிஸ்டர்கள் டேப்ரிகார்டர்கள் போன்றவற்றை வெளிநாட்டு மாடலில் போலியாகத் தயாரிக்க சென்னை ரிச்சி தெருவில் கைதேர்ந்தவர்கள் உள்ளனர். கோனிகா, ஆக்பா போட்டோ பிலிம் பெட்டிகள், டைகர் பாம் பாட்டில்கள், லேபில்கள் தத்ரூபமாகத் தயாரிக்க ஒரு திறமையான திருட்டுக் கூட்டமே உள்ளது, பிலிம்களுக்குப் பதில் நாடாக்கள், டைகர் பாமிற்குப்பதில் கிரீஸ் இவை வைக்கப்படுகின்றன. நிஜத்தை விட போலி விலை குறைவாக இருப்பதால், சிலர் எளிதில் வாங்கி ஏமாறுகின்றனர். கடத்தல் பொருட்களைப்பற்றிக் கவலைப்படும் அரசு, போலிகள் ஆயிரக்கணக்கில் மலிந்து நுகர்வோரை ஏமாற்றி வருவது பற்றிக்கவலைப்படுவதே இல்லை!

– அஞ்ஞானி



FREE E - BOOKS , www.thamizham.net.,

## செய்தி வாசிப்பவரின் தர்ம சங்கடங்கள்.

தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவர்கள் கூட நிம்மதியாக வாசிக்க முடியாத அளவுக்கு, நிர்வாகம் சீரழிந்துள்ள அவலத்தை தினமலர் (16.10.88) வெளியிட்டுள்ளது திகைப்பூட்டுகிறது:-

* செய்தி வாசிக்கும் அறையில் ஏர்கண்டிஷன் வேலை செய்வதே இல்லை. அறையில் குப்பையும், தூசியும் குவிந்து கிடப்பதோடு சகல ஜீவராசிகளும் குடியிருக்கின்றன. விளக்குப் பூச்சிகள், கொசுக்கள் செய்தி வாசிக்கும் நபரின் முகத்தின் மீதும், சட்டைக்குள்ளும் புகுந்து கொண்டு கிச்சு கிச்சு மூட்டும். இந்தத் தர்ம சங்கடமான நிலையில் பாவம் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது தவிப்பார்கள்.

* ஷோபனா ரவி மட்டுமே செய்தித் துறையின் ஒரே நிரந்தர செய்தி வாசிப்பாளர். அவர் செய்தி வாசிக்கும் நாட்களில் மட்டுமே லைட்டிங்,மேக்கப், கேமிரா போன்றவை சரியாக இயங்கும். இவரே செய்தி வாசிப்பாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதால், பெண் வாசிப்பாளர்கள் இவரது 'ஸ்டைலை' பின்பற்றி தம் இயல்பை இழந்து செயற்கையாக வாசிக்கின்றனர்.



* ஒரு குறிப்பிட்ட துணை செய்தி ஆசிரியை இருந்தால் அன்றைக்கு ,செய்தி வாசிப்பவருக்கு, கதி அதோ கதிதான். 8.40 மணி செய்திக்கு 8.35 வரை செய்திகளைத் தந்துகொண்டே இருப்பார். ஒரு முறை கூட , படித்துப் பார்க்க நேரமிருக்காது.

* செய்தியைத் தட்டச்சு செய்பவர்கள் செய்யும் குளறுபடிகள் மக்கள் மத்தியில் செய்தியை வாசிப்பவருக்கு அவப்பெயர் ஏற்படச் செய்கின்றன. அடித்தல், திருத்தல், சொற்களை மாற்றச் சொல்லும் அம்புக்குறிகள் என்று செய்திகளைத் தட்டச்சு செய்து இறுதி நேரத்தில் தரும்போது செய்தி வாசிப்பாளர் விழி பிதுங்கிப் போக நேரிடுகிறது.

- இசு



FREE E - BOOKS , www.thamizham.net.,

## சுட்டி குறுநாடகப் போட்டி முடிவுகள்

**முதல் பரிசு:** ரூ 100 பெறுபவர்: வசீகரன், தொலைபேசி நிலையம், லஸ் சர்ச் சாலை, சென்னை - 600 004.

**இரண்டாம் பரிசு:** ரூ 25 தேர்ந்து வெளியிடப்படும் அனைத்து நாடகங்களுக்கும் தரப்படுகிறது.

**பெறுவோர்:** 1. பி.என். ராஜன், 68, திரும்லைரோடு, சென்னை - 600 017 2. தங்கவயல் சீனிவாசன், 660-ஏ, சுவர்ணா நகர், இராபர்ட்சன் பேட்டை, தங்கவயல், கருநாடகம் - 563 122 3. த.ராஜா, கிளாமர் டெய்லரிங், 388 SBOA ஸ்கூல்ரோடு, சென்னை - 600 101. 4. டாக்டர் N.S. முத்தையா, 103-அ 4வது மெயின் ரோடு, நடேசன் நகர், சென்னை - 600 092. 5. அ.பெர்னாட்சா, 214/1, வ.உ.சி.ரோடு, காரைக்குடி 6. எம்.பி.வானரசன், 26, தாசர் புரம், திருநின்றவூர் - 602 024.

## ஆங்கிலம் வளர்க்கும் தமிழ்க் கல்லூரிகள்

பொங்கிப் பெருகிய காவிரி வற்றிப் போனதைப் போலவே, தஞ்சை மாவட்டத்தில் தமிழும் அற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. கரந்தை, திருப்பனந்தாள், திருவையாறு, தருமபுரம் - இப்படித் தஞ்சை மாவட்டத்தின் பல ஊர்களில் தமிழ்க் கல்லூரிகள் உண்டு! இன்றைய தமிழ்ப் புலவர்கள் பலர், அந்த மண்ணிலிருந்துதான் முளைத்து வந்தார்கள். ஆனால் அந்தத் தமிழ்க் கல்லூரிகள் இன்று தம் பார்வையை வேறு பக்கம் திருப்பியுள்ளன. இந்த வரிசையில் முதலில் நிற்கிறது, கரந்தைத் தமிழ்க் கல்லூரி!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட இக்கல்லூரி, இப்போது, கரந்தைக் கலைக் கல்லூரியாகப் பெயர் மாற்றம் செய்து கொண்டுள்ளது! இவ்வாண்டு முதல், வேதியலில் பி.எஸ்சி பட்டப் படிப்பு நுழைந்துள்ளது.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டிக் குட்டிக் கவிதைகள்

## எனது தேசம்

சட்டை தைக்க
துணி கொடுத்தேன்
டெய்லரின் மகனுக்கும்
அதில் சட்டை
வீடு கட்டப்
பணம் கொட்டினேன்
காண்ட்ராக்டருக்கும்
அதில் வீடு

## தவறு

அந்த
அரசு அதிகாரி
அறைக் கதவில்
சரியாகவே
எழுதியிருக்கிறார்கள்

-வசீகரன்

## செய்த பிழை என்ன?

என்ன தவறு
செய்ததற்காக
இந்தத் தண்டனை
மரக்கிளையில்
தலைகீழாய் வெளவால்

மழைநின்று
மனசு குளிர்ந்தபின்னும்
யார் மீது
அத்தனை கோபம்?
வானத்தை அடிக்கும்
சாட்டை மின்னல்

-ந.க.துறைவன

இவர் தலை சுற்றும்
அவள் தலை
விரித்தாடாவிடில்
ஓ! மின் விசிறி

பொன். இரா.இரவீந்திரன்

அனைத்துத் துறைகளையும்...... அருந்தமிழில் கற்பிக்கும் நோக்குடன், கலைக் கல்லூரியை உருவாக்கியுள்ளதாக நிர்வாகத்தினர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். ஆனால், வேதியில் பாடம் அங்கு ஆங்கிலத்தின் வழிதான் கற்பிக்கப்படுகிறது. தமிழவேள் உமாமகேசுவரரின் உயரிய நோக்கம் முற்றுமாய்ச் சிதைந்து போய்விட்டது!

ஏற்கெனவே அங்கிருக்கும் தமிழ்க்கல்லூரி, மேல்நிலைப் பள்ளி, தொடக்கப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை மட்டுமே 3500க்கும் அதிகம். இப்போது அதே கட்டிடத்தில் கலைக்கல்லூரி! பல்கலைக்கழக ஆய்வுக்குழு இதையெல்லாம் ஆய்வு செய்யாது போலிருக்கிறது. கலைக்கல்லூரி வந்து விட்டால் 'வருமானம்' கூடிவிடும். கட்டிடடங்களும் கட்டி விடலாம் என்று நினைத்திருப்பார்கள்.

தஞ்சை மாவட்டத்தின் மற்ற தமிழ்க் கல்லூரிகளும் கரந்தை எவ்வழி நாமும், அவ்வழி என்று முடிவெடுத் துள்ளனவாம், அது சரி, வருமானம் வருமென்றால், தன் மானத்தை விட்டுவிட வேண்டியதுதானே?

-பாமரன்



FREE E - BOOKS , www.thamizham.net.,

## எமக்கு வந்தவை

**சூழலியல் ஓர் அறிமுகம்:** (4.00) - Ecology For Beginners என்ற நூலைத் தழுவியது - நெடுஞ்செழியன் - வெளியீடு: "பூவுலகின் நண்பர்கள்" 360/6, பெல்லி ஏரியா, அண்ணா நகர், சென்னை - 600 040.

***சட்டங்கள் நமக்காக நம்மைக்காக்க:**

(இலவசம்) எளிய முறையில் சட்ட விளக்கங்கள் - 4 தொடர்வெளியீடுகள்- ம. வ. ஆனந்த குமார்.

***SUPREME COURT ON MINORITY RIGHTS:** (இலவசம்) Text of Judgement in CMC Hospital case, with an introductory note by K. Chandru

*** HOSPITALS AND OTHER INSTITUTIONS BILL, 1988** (இலவசம்) Redressal of Grievances of Employees with a critical Analysis by K. Chandru

* மேற்கண்ட 3 வெளியீடுகளும் கிடைக்குமிடம்: சட்டக் கல்வி மற்றும் உதவி நிறுவனம் , 14, இராமலிங்க நகர், பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், திருவான்மியூர், சென்னை - 600 041.

**ஆயுத மலர்கள்:** (3.00) கவிதைத்தொகுப்பு - தொகுப்பாசிரியர்: தென்பாண்டியன், ஸ்ரீ ஜெயம் பதிப்பகம், 79, பாரதி நகர், 2 வது தெரு, வில்லிவாக்கம், சென்னை - 600 049.

**காவிரி:** (10.00) 30 கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு - தொகுப்பாசிரியர்கள்:

க. அ. பிரகாசம், திரன் அரசு, கோட்டை செல்வம், வெளியீடு: பைந்தமிழ் பதிப்பகம், காங்கேயம் சாலை, கொடுமுடி - 638 151.

**அன்புத்தோழிக்கு:** (5.00) கட்டுரைகளும், - கவிதைகளும் பாமரன், வெளியீடு: யாழ்மொழி 70, சிரியன் சர்ச் சாலை, எண்:2, கோவை - 641 001.

**காகிததாஜ்மகால்:** (5.00) கவிதைத் தொகுப்பு - ஜெயந்தி குமார் - 61, பெருமாள் கோவில் தெரு, சைதாப் பேட்டை, சென்னை - 600 015.

## சுட்டி முன் இதழ்கள்

இதழ் எண் 72 முதல் முன் இதழ்களைப் பெற, இதழுக்கு 50 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) நுப்பினால், உடனே அஞ்சலில் வந்து சேரும்.



FREE E - BOOKS , www.thamizham.net.,



# நண்டின் வயிற்றுக்குள் மனிதக் குழந்தை!

படத்தில் நீங்கள் பார்க்கும மனிதக் கரு, ஒரு பெரிய நண்டின் வயிற்றிலிருந்து எடுக்கப்பட்டது. பீகார் மாநிலத்தில், பசந்த் ஜகஜிவன் பஞ்சாயத்திலுள்ள புர்ணாஹில் என்ற கிராமத்தில் இந்த ஆச்சரிய சம்பவம் நடைபெற்றுள்ளது.

நண்டின் வயிற்றிலிருந்து எடுக்கப்பட்ட இக்கருவில், மனிதக் குழந்தையின் தலையும், கை கால்களும் வளர்ந்துள்ளன. இக் கரு நண்டின் வயிற்றிலிருந்து எடுக்கப் பட்டவுடன் இறந்துவிட்டது. இக் கரு கெட்டுப்போகாமல் இருக்க இதைப் பஞ்சாயத்து மருத்துவ மனையில் ரசாயனக் கலவையில் பொதுமக்கள் பார்வைக்கு வைத்திருக்கிறார்கள்.

இம்மாதிரி ஜீவ அணுக்களில் ஏற்படும் தன்னிச்சையான மாற்றம் ஏன், எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை இதுவரை விஞ்ஞானம் கண்டுபிடிக்கவில்லை. ஆனாலும் இதிலிருந்து தெரிந்துகொள்ளக் கூடிய முக்கியமான கருத்து இது தான். 'மனிதர்கள் ஏதோ தேவ லோகத்திலிருந்து குதித்தவர்கள் அல்ல. பூமியிலுள்ள மற்ற ஜீவ ராசிகளோடு மனிதன் மிகவும் சம்பந்தப்பட்டிருக்கிறான் என்பதை இம்மாதிரியான விசித்திரப் பிறவிகளிலிருந்து, நாம் தெரிந்து கொள்ளலாம்' என்று கூறியுள்ளார் பிரபல பிரிட்டிஷ் ஆய்வாளர் டார்லிங்டன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## வாசகர் எதிரொலி

• ஐயப்ப ஜோதி உண்மையா? கட்டுரை அப்பாவித்தனமாக நம்பி ஏமாந்து திரும்பும் பக்தர்களுக்கு நல்லதொரு விளக்கம். முற்போக்கு எண்ணம் கொண்டோர் இதையே சிறு சிறு துண்டுப் பிரசுரங்களாக அச்சிட்டு பக்தர்கட்கு தெளிவுபடுத்தினால் என்ன ?

– எம் .பி . இளங்கோ, கவுந்தப்பாடி

• அட்டை கார்டூன் அருமையான மூக்குடைப்பு. நமது அரசிற்கு இந்தியாவின் இன்றைய நிலையினைத் தெளிவாக்கிக் காட்டியது — ஆர் பரமேஸ்வரன்

– பாஷியன், மராட்டியம்

• பிச்சைக்காரர்கள் பற்றிய புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல்துறை மேற்கொண்ட ஆய்வு பற்றிய செய்தி கண்டேன் இவ்வாய்வு மக்கள் கவனத்திற்கும் அரசின் கவனத்திற்கும் கொண்டு வரப்படவேண்டும். அவற்றின் அடிப்படையில் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால் அவற்றின் பயன்கள் உண்மையில் மக்களைச் சென்றடையும் அவ்வகையில் இவ்வாய்வு சமூக மதிப்பு கொண்ட தாகும்.

– இரா . நாகசுந்தரம், வில்லியனூர்

• "குடலை உருவி மாலையா போட்டிருவேன்" என்று யாராச்சும் கோபமா பேசினா எப்படி இருக்கும்னு பல தடவை நினைச்சதுண்டு. இப்போ வெளியே குடல்னு பார்த்ததும் வெலவெலத்துப்போனேன்.

– திருமதி . நாராயணராவ், சென்னை

• வயிற்றுக்காக அரசர்களை வாழ்த்துப்பாடிய புலவர் பெருமக்கள் வாழ்ந்த பூமியல்லவா இது. இந்த மரபை மறவாமல் ஜெயலலிதா துதி பாடிப் பிழைக்கும் நா. காமராசனைக் குறை சொல்லிப் பயனில்லை.

– எம் . சம்பத், வேலாயுதம்பாளையம்

• கிரிக்கெட்டும் ஒலிம்பிக்கும் என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையின் கருத்துக்களில் நூற்றுக்கு நூறு உண்மையே அடங்கி உள்ளது. கிரிக்கெட்டுக்குச் சில காலம் தடைவிதித்தாலும் தவறில்லை என்று கட்டுரையின் இறுதியில் மிகத்துணிச்சலாக எடுத்துச் சொல்லியிருந்த சுட்டியின் கருத்துக்களை சம்மந்தபட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்து உடனடியாக செயல்படுத்துவது இந்தியாவுக்கு நல்லது .

– பி . எல். பரமசிவம், மதுரை


FREE E - BOOKS , www.thamizham.net.,

# உங்கள் ஓட்டு

வசீகரன்

தேர்தல் நாளன்று ஒரு வீட்டில்

**மனைவி:-** வாங்க நான் யாருக்கு ஓட்டுப் போடட்டும்?

**கணவன்:-** நான் சொல்றதையா நீ கேட்கப் போறே? உன் பிரியப்படி போடு.

**மனைவி:-** சரி. நீங்க யாருக்குப் போடப் போறீங்க?

**கணவன்: -** அதுதான் தெரியலை, ஒரே குழப்பமாயிருக்கு.

**மனைவி:-** இதிலென்ன குழப்பம்? நம்ம பழைய எம்.எல்.ஏவுக்கே போடுங்க.

**கணவன்:-** எதுக்கு? இன்னும் நம்மளை மொட்டையடிக்கவா?

**மனைவி:-** சரி. எதிர்க்கட்சிக்குப் போடுங்க.

**கணவன்:-** எத்தனை வருஷமா காத்துக்கிட்டிருக்காங்க! அப்புறம் காஞ்ச மாடு கம்மங் கொல்லைல புகுந்த கதைதான்.

**மனைவி:-** யாரு கம்மி ஊழல் செஞ்சாங்களோ. அவங்களுக்குப் போடுங்க.

**கணவன்:-** ஊழல்ல கம்மி- அதிகம்னு இடையாது. பணத்தோட மதிப்பு வருஷா வருஷம் குறையுதில்ல. ஒருகாலத்தில் ஆயிரக் கணக்கில் ஊழல். அப்புறம் இலட்சம். இப்ப கோடி.

**மனைவி:-** கூட்டணிக் கட்சி ஜனநாயகத்தை ரொம்ப மதிக்குதுங்க.

**கணவன்:-** கோட்டையில் உட்கார வெச்சுப் பாரு. அப்புறம் மிதிக்கும்.

**மனைவி:-** எனக்குத் தெரியும். உங்க அபிமான நடிகை பிரச்சாரம் பண்ண வந்தப்போ போனீங்களே. அவ சேர்ந்திருக்கிற கட்சிக்குத்தானே உங்க ஓட்டு?

**கணவன்:-** மேக்-அப் இல்லாம எப்படி இருக்கான்னு பார்க்கப் போனேன். ஆனா மேக்கப்போடதான் மேடைக்கு வந்தா. வருமான வரிப்பிரச்சனையால அந்தக் கட்சியில சேர்ந்திருக்கா. அதுக்கு நான் ஓட்டுப் போடறதாவது. கர்மம்.

**மனைவி:-** ஏன்- கந்தசாமி ரொம்ப நல்லவராச்சே?

**கணவன்:-** ஒருதடவை ஜெயிக்கட்டும். நல்லவனும் கெட்டவனாயிடுவான். யாரு ஜெயிச்சாலும் பணக்காரனுக்குத்தான் சாதகம். அதிகாரிகள் இலஞ்சம் வாங்கத்தான் செய்வாங்க. அடிப்படையிலஎங்கியோ பெரிய தப்பிருக்கு

**மனைவி:-** அப்போ நீங்க ஓட்டுப் போடப் போகப் போறதில்லையா?

**கணவன்:-** இந்த சுதந்திர நாட்டில எனக்குள்ள ஒரே உரிமை ஓட்டுப் போடறதுதான். அதையும் விட்டுட்டா எப்படி?

**மனைவி:-** அப்போ- செல்லாத ஓட்டா போடப் போறீங்க?

**கணவன்:-** அதுக்கு போடாமயே இருந்திடலாம்.

**மனைவி:-** அப்படிச்சீது இருந்திடாதீங்க. ஓட்டுப் போடாட்டி செத்த மனுசன்னு எங்க கிராமத்துல சொல்வாங்க.

**கணவன்:-** ம். யாருக்கு ஓட்டுப் போடறது? ஒரே குழப்பமாயிருக்கு.

தேர்தல் பூத்தில்

**அதிகாரி:** -நீங்க ஏற்கெனவே ஓட்டுப் போட்டாச்சு

**கணவன்:** - சார்! இன்னும் போடலை. கைவிரலைப் பாருங்க.

**அதிகாரி:** -சரி. நீங்க போடலைதான். வேற யாரோ உங்க ஓட்டைப் போட்டுட்டுப் போயிட்டாங்க. வருத்தப்படாதீங்க. அடுத்த எலெக்ஷனுக்காவது நேரத்தில வாங்க. (குழப்பம் ஒருவழியாக தீர்ந்த சந்தோஷத்தில் கணவன் வெளியில் வருகிறான்.)



FREE E - BOOKS , www.thamizham.net.,

*1935 ஆம் வருடம், ஜெர்மனிப் பத்திரிகையொன்றில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.*

'ஸ்டட்கார்ட்செய்துங்' என்பது அந்தப் பத்திரிகையின் பெயர். வில்லி ஸ்டுவர் வால்ட் என்பவர், தன்னைக் கவர்ந்த ஒரு வெளிநாட்டு மனிதரைப் பற்றி அக்கட்டுரையில் எழுதியுள்ளார். அந்த வெளிநாட்டு மனிதர் யார் தெரியுமா? நம்ம ஊர்க் காரர். நம்மாலும், நமக்கு வாய்த்த அரசாங்கங்களாலும், அவருடைய இறுதிக் காலம்வரை, புரிந்து கொள்ளப்படாதவர். கடைசியில் விரக்தியடைந்து, தன்னுடைய படைப்புக் களையெல்லாம், சென்னை, தீவுத்திடலில் போட்டு உடைத்தவர். நம் ஜி.டி. நாயுடு!



வில்லி வால்ட், நம் ஜி.டி. என் பற்றி என்ன எழுதியுள்ளார்? மொழியாக்கம் கீழே:-

*'இந்திய நாட்டைச் சேர்ந்த ஜி.டி. நாயுடு என்பவரின் அரிய கண்டுபிடிப்பான 'ரேசன்ட் பிளேடு' அறிவியல் உலகில் மற்றுமொரு சாதனையாகும். அந்த பிளேடின் மூலம் குறைந்தது 200 முறை சவரம் செய்துகொள்ள முடியும் என்பது ஆச்சரியம் தரும் விஷயம்தானே! இந்த பிளேடை, நம் நாட்டில் உள்ள ஹெயில்பிரானில், கோபர் ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலையில் தான் அவர் தயாரித்துக் காட்டியுள்ளார். ஆனாலும் தொடர்ந்து அந்த பிளேடுகளை இங்கு உற்பத்தி செய்ய அவர் மறுக்கிறார். விக்டர் புராடெக்ட்ஸ் கம்பெனி, மாதம் 15000 ரூபாய் சம்பளம் தருவதாய்க் கூறியும், அவர் மறுத்துவிட்டாராம். என் தாய்நாட்டிற்குச் சென்று, அங்குதான் அந்த பிளேடுகளை உற்பத்தி செய்வேன் என்று உறுதியாகச் சொல்லி விட்டாரம். என்னே அந்த மனிதரின் தாய்நாட்டுப் பற்று, பாருங்கள்'*

நம் ஜி.டி.என். கொண்டிருந்த தாய்நாட்டுப் பற்றை வெளிநாட்டினார் உணர்ந்துள்ளனர். ஆனால், தாய்நாடு கடைசிவரை அவரைக் கௌரவிக்கவில்லை என்னும் கேவலத்தை அவர்கள் உணர்ந்திருக்க மாட்டார்கள்.

-சுபவீ



FREE E - BOOKS , www.thamizham.net.,

தென்கிழக்கு ஆசியா

# மலேசியா



தென்கிழக்கு ஆசியாவின் பணக்கார நாடுகளில் மலேசியாவும் ஒன்று. ரப்பர், ஈயம், பாமாயில் இவற்றின் உற்பத்தியில் உலகிலேயே முதலிடம் வகிக்கும் இயற்கை வளமே இதன் செல்வச் செழிப்பிற்குக் காரணம்.

தீபகற்ப மேற்கு மலேசியாவிற்கு 700 . கி.மீ தூரத்தில் தென் சீனக் கடலில் போர்னியோ தீவில் சபா, சரவாக், என்ற கிழக்கு மலேசியப் பகுதிகள் தனியாக அமைந்துள்ளன

கி.மு. 2000 க்கு முன்பு தென் சீனாவின் யூனன் பகுதியிலிருந்து வந்தவர்களே இதன் பூர்வீக மலாய்க்காரர்கள. கி. மு300 க்கு முன்பே இங்கு இந்தியக் குடியேற்றம் தொடங்கிவிட்டது இந்நாட்டின் முதல் அரச பரம்பரையான"லங்கா சுகம்" இந்தியர்களால் அமைக்கப்பட்டது இதன் முதல் மன்னன் மாறன் மகா வம்சன். மலாய்க்காரர்கள் உடலில் ஓடும் இரத்தமும் கலாச்சாரமும் இந்தியச் சார்புடையதே.

15 ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த இந்திய முஸ்லீம் வணிகர்கள் மன்னன் பரமேஸ்வரனை இஸ்லாமியராக்கி பின்னர் நாட்டையே இசுலாம் சமயத்திற்கு மாற்றினர் இன்று மலேசியா ஒரு இசுலாமிய நாடாக விளங்குகிறது - மலாய்காரர்களே முதல் குடிமக்கள்

19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வசப்பட்ட மலேசியா 1957 இல் விடுதலை பெற்றது இந்தியாவில் நிகழ்ந்த விடுதலைப் போராட்டத்தின் பாதிப்பாகவே இங்கு விடுதலை இயக்கம் தோன்றியது

சென்ற நூற்றாண்டில் ரப்பர் உற்பத்தியில் உலக முதலிடம் வகித்த பிரேசிலை வீழ்த்த 1877 இல் சர் ஹென்ரி விக்ரஹாம் என்ற ஆங்கிலேயர் பிரேசிலிலிருந்து 20 ரப்பர் மரக் கன்றுகளைத் திருட்டுத்தனமாகக் கடத்தி வந்து மலேசிய மண்ணில் நட்டார் இதுவே இன்று மலேசியாவை ரப்பர் காடாக்கியுள்ளது எல்லா மாதங்களும் ஒரே சீரான வெப்பநிலை தினமும் வெயில் மழை என்று இயற்கையே தோட்டக்காரனாக மாறி மனித முயற்சியின்றி மண்ணில் போட்டதைப் பொன்னாக்கி விடும் அதிசய தேசமிது

இங்கு நிலவுவது வரையறுக்கப்பட்ட முடியாட்சி பரம்பரை ஆட்சி நடத்தும் 9 சுல்தான்கள் தமக்குள் ஒருவரை 5 ஆண்டுகளுக் ஒருமுறை மன்னராகத் தேர்ந்தெடுப்பர் எனினும் பாராளுமன்றமே சக்தி வாய்ந்தது ஆளுங்கட்சியானது மலாய்காரர்களின் கட்சி சீனர்களின் கட்சி மலேசிய இந்திய காங்கிரஸ் - ஆகிய மூன்று கட்சிகளின் கூட்டணியாக அமைந்துள்ளது

நாட்டின்1 1/2 கோடி மக்களில் சுமார் 47% மலாய்க்காரர்களும் 33% சீனர்களும் 13% இந்தியர்களும் உள்ளனர் இந்தியர்கள் பெரும்பாலானோர் தமிழர்களே தேசிய மொழி மலாய் மொழியானாலும் தமிழும் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக உள்ளது.

மூவினங்களும் ஒற்றுமையாக வாழ அவசியமிருப்பினும் மூவின ஒற்றுமை இங்கு நடைமுறையில் இல்லை. மலாய் கட்சியில் பிளவு ஏற்பட்டு கட்சியே கலைக்கப்படும் சூழல் எழுந்தது. சீனர் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது தமிழர்களிடமும் உட்பூசல் மிகுந்துள்ளது. ம.இ. காங்கிரசின் தலைவர் அமைச்சர் சாமிவேலு மரபுக்கு மாறாக இருமுறைக்கு மேல் தலைவர் பதவியை அனுபவிக்க விரும்புவதால் கட்சியின் பிற தமிழர் தலைவர்கள் வெறுப்படைந்துள்ளனர் கட்சியில் இரு அணிகள் தோன்றி உட்பூசல் வலுக்கிறது.

- உலகப்பன்



FREE E - BOOKS , www.thamizham.net.,

## பெண்களுக்குத் தனிப்பல்கலைக்கழகம் தேவைதானா?

'எனக்கு முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை
அவர்களின் பார்வையில்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன
கணவன் தொடக்கம்
கடைக்காரன்
வரைக்கும்
இதுவே வழக்கம்'

என்னும் ஈழத்து சோதரி சங்கரியின் கவிதையில் தான் எவ்வளவு யதார்த்தம்!

ஏன் இப்படி ஒரு போகப் பொருளாகவே பெண்ணை இளைஞர்கள் பார்க்கின்றனர்? இருவரையும் நெருங்க விடாமல் பிரித்துவைப்பதால்தான் இந்த விபத்து அதிகமாகிறது.

அறிவைப் புகட்டும் கல்வி நிறுவனங்கள் கூட, ஆணுக்கென்றும், பெண்ணுக்கென்றும் தனித்தனியாக அல்லவா பிரிந்து கிடக்கின்றன? இந்த அவல நிலை, முன்னேறிய வெளிநாடுகள் எவற்றிலும் இல்லை.

ஆணையும், பெண்ணையும் சேர்த்து பழக்கவிடாமல் சின்ன வயசிலேயே பிரித்துவைப்ப தால்தான் ஒருவருக் கொருவர் புரியாத புதிராய், காணாத அதிசயமாய் ஆகிவிடுகின்றனர். பாலு ணர்வை அறியாத சிறு வயது முதலாக சேர்ந்து படித்திருந்தால், இருவருக்குள்ளும் இயல்பான தோழமை வளர்ந்திருக்கும். மேல் வகுப்பு களுக்கு வரும்போது ஒருவரையொருவர் கேலிசெய்து கொள்ள மாட்டார்கள். மாணவர்கள் தங்கள் உணர்வு களை மேஜை, நாற்காலிகளிலும், கழிவறைச் சுவர்களிலும் எழுதியும், கிறுக்கியும், ஆபாசப் படம் வரைந்தும் தீர்த்துக் கொள்ள முயல மாட்டார்கள்.

பாலுணர்வை ஓர் அறிவியல் பாடமாக மாணவர்கள் படிப்பதை மறுதலிக்கும் நம் சமூகம், அவர்கள் தப்பும், தவறுமாக பாலியல் கருத்துக்களைப் புரிந்து கொண்டு, மன வக்கிர அரிப்புகளுக்குத் தவறான தீர்வைத் தேடித் தடுமாறுவதைத் தடுக்க என்ன வழி வைத்திருக்கிறது!

அரசாங்கமும், சமூகத்தின் மூட நம்பிக்கைகளுக்குத் தொடர்ந்து பலியாகிறது. பெண்களை உயர்த்துவதாக எண்ணிக்கொண்டு, கொடைக் கானலில், பெண்களுக் கென்று தனிப்பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது. ஆணோடு பெண் போட்டி போட முடியாதென்று கூறும் பழமைக் கருத்துக்கு மேலும் வலிவூட்டும் விஷயமல்லவா இது!

– பழனி



FREE E - BOOKS , www.thamizham.net.,







FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது எளிய மருத்துவம் 4

## ஜலதோஷம்

அறிகுறிகள்: தும்மல், மூக்கு நீர்பாய்தல், மூக்கடைப்பு, சிணுக்கிருமல், தொண்டை புண்ணாதல்.

மருந்து: 5 கிராம் பொடித்த மிளகிற்கு 200 மி. லிட்டர் நீர் சேர்த்துக் காய்ச்சி 1/4 பாகமாக அதனை, சுண்ட வைக்கவும். இதனை 25-50 மி.லிட்டர் வரை அருந்தவும்.

## வாய்ப்புண்

அறிகுறிகள்: ஈறு, வாய் சிவந்து வலித்தல், நாவீக்கம், வாய் நாற்றம்.

மருந்து: 1) 3 1/2 கிராம் படிகாரத்தை ஒரு லிட்டர் நீரில் கரைத்து வடிகட்டி அதனைக் கொப்பளிக்கவும், புண்களைக் கழுவவும் பயன்படுத்துக.

2) மணத்தக்காளிக் கீரையைச் சமைத்து உணவுடன் கலந்துண்ணவும்.

3) முட்டை வெண்கரு கலந்த பசுப்பாலை அருந்தி வரவும்.

## விக்கல்

அறிகுறிகள்: தொடர்ந்து அல்லது எப்பொழுதாவது விக்கல் தோன்றும்.

மருந்து: 1) கஸ்தூரிக் கரும்பு 60-130 மி.கிராம் தினம் அல்லது 3 வேலை தேனுடன் உண்ணவும்.

2) சர்க்கரை ஒரு ஸ்பூன் வாயில் போட்டு நாக்கில் படும்படி நறநறப்புடன் மெதுவாக உண்ணவும்.

## காலாணி

மருந்து: காலாணியைச் சீவி உப்புப்பொடி கொண்டு ஒற்றிடம் கொடுக்கத்தீரும்.

## முகப்பரு

மருந்து: திருநீற்றுப்பச்சிலையைக் கசக்கி அல்லது சங்கினை நீரில் இழைத்துப் பூசி வர குணமடையும்

– சிக்கன்


## சுட்டி விற்பனையாளர்கள் தேவை

சுட்டி விற்பனையாகாத எல்லா இடங்களிலும் முகவர்கள் தேவை. எளிய விதிமுறைகள், தரமான கமிஷன், சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமை உண்டு.




FREE E - BOOKS , www.thamizham.net.,

# சென்னை நகர் வெள்ளமும் வைஜெயந்தி மாலா எம்.பியும்

மீண்டும் சென்னைக்கு வெள்ள அபாயம் வரவிருக்கிறது! 1985க்குப் பிறகு, இப்போது மீண்டும், அதே போல அல்லது அதைவிடக் கடுமையான, வெள்ளம், நவம்பர் மாதம் வரக்கூடும் என விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இடைப்பட்ட மூன்று ஆண்டுகளில் வெள்ளத்தடுப்புக்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? மீண்டும் கோட்டூர்புரங்கள் நீரில் மூழ்காதிருக்க என்ன வழி?

'நீரியல், நீர்நிலையியல் ஆய்வுக் கழகம்' பல யோசனைகளை அரசுக்குத் தெரிவித்துள்ளது. ஆனால், அரசியல் தலையீடுகளால், அந்தத் திட்டங்கள் செயல்வடிவம் பெறாமலேயே உள்ளன.

உதாரணத்திற்கு ஒரு விஷயம். ஏறத்தாழ விநாடிக்கு 60 ஆயிரம் கன அடி தண்ணீர் வரை தாக்குப்பிடிக்கக் கூடிய சைதை மறைமலையடிகள் பாலம் (ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது),

1985 ல், 43,000 கன அடி தண்ணீரிலேயே மூழ்கிப்போனது, ஏன் தெரியுமா? அந்தப் பாலத்தையொட்டி 'பாலி கோல்டு ஸ்டோரேஜ்' (Bali Cold Sotrage) என்று ஒரு கட்டிடமுள்ளது. அந்தக் கட்டிடம், பாலத்திற்குக் கீழேயுள்ள, மூன்று மதகுக் கண்களை அடைத்துக் கொண்டு நிற்கிறது, ஆகவே, மதகுகளின் வழியே வெளியேற முடியாத தண்ணீர், பாலத்துக்கு மேலே ஓடி வருகிறது. இப்படி, தண்ணீரின் உயரம் அதிகமாவதால், பல பகுதிகள் நீரில் மூழ்குகின்றன.

அப்படியானால் அந்தக் கட்டிடத்தை அங்கு எழுப்புவதற்கு அரசு ஏன் சம்மதித்தது? அந்தக் கட்டிடத்தால் இனிவரும் நாட்களிலும் வெள்ள அபாயம் இருக்கும்போது இன்னும் ஏன் அது அகற்றப்படாமல் உள்ளது? விடை எளிது!

அந்தக் கட்டிடத்தின் உரிமையாளர் பாலி, வெறும் பாலி இல்லை; வைஜெயந்தி மாலா பாலி!

-பழநி.

**சுட்டி தொடர்பு முகவரி**


**A P - 638, H பிளாக், அண்ணா நகர்,**

**சென்னை - 600 040.**



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சின்னப்பயலே!



எந்த வல்லரசு
எதிர்த்தாலும்
எதிர்த்து நிற்கும்
ஈழமா நீ!

http ://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

FREE E - BOOKS , www.thamizham.net.,